மாண்புமிகு திரு. க. இராசாராம்: வீட்டுவசதி வாரியத்திற்குத் தேவையான சிமென்டை மாநில அரசு மத்திய அரசிடமிருந்து பெற்று அல்லது தொழிற்சாலைகளிலிருந்து பெறும் அனுமதியைப் பெற்று வாங்கிக் கொடுக்கிறது. அந்த வகையில் மத்திய அரசை அணுகி இருக்கிறோம். இருந்தபோதிலும் சிமென்ட் பற்றாக்குறை அதிகமாக இருப்பதால் இப்போது சுண்ணாம்பு கொண்டு கட்ட ஆரம்பித்திருக்கிறோம்.

குருவராஜபாளையம் வீடு அடமான சங்கம்

*559 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்திலுள்ள குருவராஜபாளையம் கூட்டுறவு வீடு அடமான சங்கம் எந்த ஆண்டு துவங்கப்பட்டது?

(இ) அதில் எந்தெந்த கிராமங்களுக்கு கடன் வசதி வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) குருவராஜபாளையத்தில் கூட்டுறவு வீடு அடமான சங்கம் ஏதும் ஆரம்பிக்கப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவரவர்களே, குருவராஜபாளையம் கிராமப்புற வீட்டுவசதி சங்கம் என்ற அமைப்பின்கீழ் பல ஆண்டு காலம் இயங்கி, 5 பேர்களுக்கு மேல் கடன் வழங்கவில்லை என்பதை அரசு அறியுமா? ஆகவே குருவராஜபாளையத்தில் ஒடுகத்தூர் பேரூராட்சியில் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் ஒன்றை அமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை விரைவில் தொடங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அங்கே கிராமப்புற வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கம் இருந்தது உண்மை. ஐந்து பேருக்கு கடன் வழங்கி இருக்கிறார்கள். புதிதாக இப்போது ஒரு கூட்டுறவு சங்கம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். அரசாங்கம் விரைவில் அதை அனுமதிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1975 ஏப்ரல் 3]

Notices for Strikes

* 560. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state whether it is a fact that there is a rule that taxi drivers and autorickshaw drivers in the City of Madras should go on strike only after prior notice to the Government?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வாடகை வண்டிகள், ஆட்டோரிக்ஷாக்கள், மோட்டார் போக்குவரத்து பணிகளாகும். எனவே, அவை பொதுமக்களுக்குப் பயன்படும் பணிகளின் கீழ் வருகின்றன. தொழில் தகராறுகள் சட்டத்தின் 22-வது பிரிவையொட்டியும், தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் விதிகளைச் சேர்ந்த 59 (1) விதியையொட்டியும், வாடகை வண்டி ஓட்டுநர்கள், ஆட்டோரிக்ஷா ஓட்டுநர்கள், மேற்படி வண்டிகளின் உரிமையாளர்கள், சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் ஆகியோருக்கு மேற்சொன்ன விதிகளில் வரையறுக் கப்பட்ட '0' படிவத்தில் 14 நாட்களுக்கு முன்னதாக வேலைநிறுத்த அறிவிப்பை அனுப்ப வேண்டும். ஆனால், உரிமையாளர்களே வாடகை வண்டிகளையும், ஆட்டோ ரிக்ஷாக்களையும் தொழிலாளர்களின்றி ஓட்டுகின்ற பட்சத்தில் தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் அவ்வுரிமையாளர்கள் வேலை நிறுத்த அறிவிப்பைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், மேற்படி சட்டத்தின்கீழ் அவர்கள் 'தொழிலாளர்கள்' அல்லர். மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் டாக்சி, ஆட்டோ ரிக்ஷா உரிமையாளர்கள்/வலவர்கள் வேலைநிறுத்த அறிவிப்பு எதையும் கொடுக்க வேண்டுமெனச் சொல்லப்பட்டிருக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அவையுரிமை மீறல் பிரச்சனை.

எதிர்க்கட்சி தலைவர்கள் கூறாததை அவர்கள் கூறியதாக திரு. ந. வீராசாமி கூறியதுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2—4—1975-ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையின் பேரவைத் தலைவர் அவர்களைப் பதவி நீக்கம் செய்யக்கோரும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறும்

பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமியின் பேச்சில் குறுக்கிட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கீழ்க்கண்ட உரிமை மீறல் பிரச்சனையை எழுப்பினர் :—

"ஒரு குறிப்பிட்ட சம்பவம் இந்த மன்றத்திலே நடந்தது, இந்த மன்றத்திலே நடைபெற்று, ஒவ்வொரு கட்சித் தலைவரும், நாங்கள் பேசிவிட்டு வெளியே சென்றோம். அதற்குப் பிறகு, சில விஷயங்கள் முடிந்தது. அப்படியிருக்கும் பொழுது உண்மைக்கு மாருக நாங்களெல்லாம் வருத்தம் தெரிவித்ததாக உறுப்பினரவர்கள் சொல்கிருர்கள். ஆகவே, இந்தப் பிரச்சனையை பிரிவிலேஜ் கமிட்டிக்கு விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்."

திரு. தங்கமணி அவர்களால் ஆட்சேபிக்கப்பட்ட திரு. வீராசாமி அவர்களின் பேச்சின் பகுதி கீழே தரப்பட்டுள்ளது :—

"அப்படித்தான் செய்தார்கள் . . .

அதைப்பற்றி எதிர்க் கட்சியிலே இருப்பவர்களிடம் தனித்தனியாகக் கேட்டால் சொல்வார்கள். . .

அந்தச் சம்பவத்தைப் பற்றி வருத்தப்பட்டிருக்கிருர்கள். . . .

அவர்களுடைய ஒவ்வொரு தலைவரும் தனிப்பட்ட முறையிலே வருந்தியிருக்கிருர்கள்."

எந்த ஒரு கூற்றும் சட்டமன்றப் பேரவைக்கு வேண்டுமென்றே தவருன தகவலை தரவேண்டுமென்ற உள்நோக்கத்துடன் கூறப்பட்டிருந்தால் அது அவையுரிமை மீறிய செயலாகும். அவையில் நடந்த நிகழ்ச்சியை மாற்றியோ, திரித்தோ கூறினுலும் அவையுரிமையை மீறிய செயலாகும்.

திரு. வீராசாமி அவர்கள் பேச்சில் எதிர்க்கட்சி தலைவர்கள் எங்கு, யாரிடம் வருத்தம் தெரிவித்தார்கள் என்று குறிப்பிடப் படவில்லை. ஒவ்வொரு தலைவரும் வருத்தம் தெரிவித்ததாகப் பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே அல்லாமல், அவையில் வருத்தம் தெரிவித்தார்கள் என்று கூறவில்லை.

எனவே, மேற்படி நிகழ்ச்சி குறித்து அவையுரிமை மீறிய செயல் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.